



# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஃ
முஹம்மதுற றஸூலுல்லாஃ"

புத். 1. { அறபுஹு 1312 றபியுல் அவ்வல் மீ 1௳ ஞா. கி. / இங்கிலிஷுஹு 1894 செப்டம்பர் மீ 2௳ ஞா. } இல. 14.


## மிஸ்று தேச சரித்திர சுருக்கம்.

ஆபிரிக்கா கண்டத்தின் வட கீழ் மூலைக்கு மிஸ்று என்று பேர். அறபியரிற் சிலர் மிஸ்று என்றும், மஸ்று என்றும் உச்சரிப்பார்கள். மஸ்றாஸா என்று அதற்கோர் பெயருண்டு. ஐரோப்பியர் இஜிப்ட் என்பார்கள். மிஸ்று என்பதற்கு பட்டணம் என்பது பொருள். இந்த தேசம் வீதியில் குறைந்த ஒரு நெடும் பள்ளத்தாக்காய் இருக்கிறது. அதின் ஊடே நீல் என்னும் நதி தென் வடபாகமாக ஓடி மெதித்திரானியாக் கடலை சமீபிக்கு முன்னே பல கவர்களாகி அக்கடலில் பாய்கின்றது. அந்த கவர்களுக்கு உட்பட்ட பூமி முக்கோண வடிவமாய் "டெல்ற்ரு" என்று பேர் பெற்ற மைதானமாய் இருக்கின்றது

மிஸ்று தேசத்தின் வட பக்கமாகிய மைதானத்திற்கு முற்காலத்தில் கீழ் மிஸ்று என்றும், தென் புறத்துக்கு மேல் மிஸ்று என்றும், அவ்விரண்டுக்கும் இடைப்பட்ட நாட்டுக்கு இடை மிஸ்று என்றும், பேர் சொல்லுவார்கள். மிஸ்றுக்கு தெற்கே நிலையற்ற சில சனங்கள் சஞ்சரித்த நியூபியாவின் மணற்காடுகளும். மிஸ்றியருடைய நாகரீகத்துக்கு காரணமாயிருந்தது

சக் காணப்படுகிற எத்தியோப்பியா தேசமும் இருந்தன.

கீழ் மிஸ்றில் மழை பெய்கிறது அபூர்வம். மேல் மிஸ்றில் மழை காணக் கிடையாது என்றும் சொல்லலாம். பின்னை மிஸ்று தேசத்துக்கு உண்டாயிருக்கிற செழிப்புக்கு காரணம் என்னவென்றால், எத்தியோப்பியா தேசத்து மலைகளில் மாரிகாலத்தில் பெய்யும் கனத்த மழைகளால் நீல் நதி பெருகி கரை மறிந்து பாயும். அக்காலத்தில் மிஸ்று தேசத்தின் தாழ்வான இடங்கள் எல்லாம் விஸ்தாரமான ஏரிபோலவும் அங்குள்ள பட்டணங்கள் எல்லாம் தீவுகள்போலவும் தோன்றும். தண்ணீர் வற்றினவுடனே நிலங்கள் எல்லாம் வண்டல் மூடி உரமாய் கிடக்கும். அவைகளில் பயிரிட்டு சிறிது காலத்துக்குள்ளே மிகுதியான தானியம் விளைவித்துக்கொள்ளுவார்கள்.

பண்டு மிஸ்றில் கோதுமையும், பலவகை பயறுகளும் ஈரவெங்காயங்களும் மிகுதியென்று பிரசித்தம். பூர்வீகத்தில் அந்த தேசம் அயல் தேசங்களில் இருந்தவர்களுக்கு பஞ்சகாலங்களில் புகலிடமாயிருந்தது. பிற்காலத்தில் உரோமாபுரிக்கு அது ஒரு களஞ்சியமாக நின்றது. மிஸ்று தேசத்து சணலும் சணற் புடவையும் உசிதமானவைகள். இந்த தேசத்தின் வட புறத்திலுள்ள சேணி நிலங்களில் பேப்புருஸ் என்னும் ஒரு வகை நாணற் செடி உண்டாகும். அதை எழுதுகிறதற்கு மிகவும் உபயோகமாய் இருந்ததினாலே சகல தேசத்தாரும் விரும்புகிறதாயிருந்தது.

ஆடு மாடு முதலிய வளர்ப்பு மிருகங்கள் மிஸ்றில் மிகுதி. பாம்புகளையும் பூச்சிகளையும் தின்றறுக்கிற ஐபிஸ் என்னும் பேருள்ள ஒரு வகை நாரையும் அங்கே உண்டு.

இன்னும் வரும்.

## மெய்ஞ்ஞான விளக்கம்.

நாம் இம்முகவுரையின் கீழ் சில விஷயங்களை சென்ற 12 மிலக்கப் பத்திரிகையிலெழுதினோம். இப்பொழுதுஞ் சிலவற்றை யெழுதுவோம்.

அல்லாஹுத்தஆலா ஈமான் என்னும் நல் விசுவாசத்தை அவனுடைய கிருபையைக்கொண்டு அருளியிருக்கின்றான். அப்படிக்கொத்த ஈமானை வீணிலே போக்கிவிடுவோர் இருலோகத்திலும் நட்டவாளராயிடுவார்கள். அறிவில்லாத சில செய்குமார்கள் வயற்றுப் பிழைப்பைப் பெரிதாய்க்கொண்டு ஏழை மதியினரான சாதாரண சனங்களின் ஈமானைக் கெடுத்துக் காசு பறித்துக்கொண்டு தங்கள் தேசம்போய் வயல், காணி, பூமி முதலியவைகளை வாங்கி உழுதுண்டு வாழ்கின்றார்கள். அவர்கள் பரலோகவாழ்வைப் பெரிதாய்க் காணாமல் இப்பூலோகவாழ்வைப் பெரிதாய்க் கண்டு இவ்வுலகத்திற்காக பரலோகத்தை விற்கின்றார்கள்.

சத்தியமாக இந்த இலங்கை முஸ்லிம்களில் விவேகமற்ற ஏழைச்சனங்களை தென் இந்தியாவைச் சேர்ந்த கோட்டாறு முதலிய ஊர்களிலிருந்து வந்த அஞ்ஞான மோட்டாத்துமாக்கள் என்னும் அவிவேக பூரணச் சேகுமார்கள் நஸிஹத்து என்று கள்ள உபதேசங் கொடுத்து மோசஞ்செய்து விட்டார்கள். அவர்களின் ஆபாச வலையுட் சிக்கி மோசமானவர்களுக்கு நாம் எழுதும் நல்லறிவுகள் கசத்திருப்பினும், அவர்கள் சற்று பொறுமையோடு அருந்தி வருவாராயின் தமது தேகத்தை வளர்த்து உயிரைக் காக்கும் அமுத சஞ்சீவி என்று கண்டு கொள்ளுவார்கள். சுரநோய்பிடித்திருக்கிறவனுக்கு தித்திப்பானபதார்த்தங்கள் கைப்பாயிருப்பது அவனுடைய நோயின் கேடன்றி, அப்பதார்த்தங்களின் சுபாவ குணமல்ல, அதுபோல நம்முடைய ஞானபோதகம் நேர்வழி தப்பியவர்களுக்கு கைப்பும் நேர்வழியிலுள்ளவனுக்கு இனிப்புமா யிருக்கும்.

சில அறிவிற்குறைந்த செய்குமார்கள் தவ்ஹீதின் முறைகளை நன்றாயறிந்து விளங்கிக்கொள்ளாமல் "அனகூ" நான் அவன் என்றும் "லாகுவ இல்லாஅன" அவனில்லை நானேயல்லாது என்றும், அனல்லா அனல் அக்கு என்றும் இதுபோலுள்ள இக்றுகளைச் சொல்லிக் கொடுத்து மனிதர்களைக் குபிரீயத்திலாக்கி விடுகிறார்கள். இன்னுஞ் சில செய்குமார்கள் இவ்விதமான இக்றுகளைத் தங்கள் முரீதீன்களுக்குச் சொல்லிக்கொடுத்து இந்த இக்றை ஓயாமற் செய்து வருவீர்களேயானால் ஏவல் விலகல் உங்களை விட்டும் விழுந்துவிடும் நீங்கள் அல்லாஹுத்தஆலாவிடஞ் சேர்ந்து அவனும் நீங்களும் வித்தியாசமற்று ஒன்றாகி விடுவீர்களென்றுஞ் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

முஹியித்தீன் இப்னு அறபி றலியல்லாஹு அன்ஹு புத்தூகாத்துல் மக்கியாவில் அகமியங்களைப் பேசும் பாடத்திற் சொல்லுகிறார்கள் நீ நீயே அவன் அவனே ஆனதால் ஆசை வைத்தவனும் ஆசை வைக்கப்பட்டவனும் ஒருவனே என்று சொல்லாமலிருக்கும்படி உனக்கு அச்சமூட்டுகிறேன் அப்படி இரண்டையும் ஒன்றென்றுசொல்வது மடமையாயிருக்கிறது அந்த மடமையினாற் சொல்லுஞ் சொல்லைச் சரியென்று காணப்படாது இன்னமும் அவர்கள் சொல்லுகிறார்கள் நீ அவனாயிருந்தால் அல்லாஹுத்தஆலா தன்னைப் பூரணமாயறிந்ததுபோல நீயும் அவனைப் பூரணமாயறிந்திருக்க வேண்டுமே அவனை அறியக்கூடாததா யிருக்கின்ற பதவிகளனைத்திலும் அவனை நிரப்பமாய் அறிந்துகொள்ள வேண்டுமே அப்படி ஒருகாலமும் அல்லாசுபுஹானஹு வத்தஆலாவை அறியக்கூடாது. இன்னமும் அவர்கள் சொல்லுகிறார்கள் ஒருவன் நானே ஆசிக்கிறவனும் நானே ஆசிக்கப்படுபவனுமென்றுசொல்வானேயானால் அந்தச்சொல்லானது ஆசையும் அன்புமுடைய நாவின்பே

ச்சேயன்றி அறிவைக்கொண்டும் விளக்கத்தைக்கொண்டும் இட்டமாய்ப் பேசும் பேச்சல்ல.

இப்படியாக அல்லாஹுறப்பத்தஆலாவின் பெயரில் ஆசைகொண்டு தன்யாதற்று (ஜதுபு) மயக்கத்திலுற் சில பெரியோர்களின் நாவினால் வெளிப்பட்ட சொற்களை ஒன்றும் அறியாத மூடர்களுக்கு இதுவே கலிமா இதுவே திக்று என்று சொல்லிக் கொடுத்து அவர்களை மோசத்தி லுட்படுத்தி அநியாயஞ் செய்கிறார்கள்.

தவ்கீதுக் கித்தாபுகளாகிய புதூகாதுல்மக்கிய்யா, அவாரிபுல்ம ஆரிப், யவாக்கித்துல் ஜவாகிறு, துகுபத்துல் முறுஸலா, போலுள்ள மற்றும் ஞான அந்தரங்கக்கித்தாபுகள் சகலத்திலும், ஒருவன் அவனுடைய மஸ்தில் முன் சொன்னது போலுள்ள சொற்களைச் சொல்லுவானாகில் அவன் பைத்தியக்காரனுடைய நிலைபரத்தில் இருப்பதால் அவன் ஆக்கினையை விட்டும் நீங்கிக்கொள்வான் யாதிருக்கும்போது அப்படிச் சொல்வானாகில் அவனுக்கு துன்யாவிலே தண்டனையாய் அவனை மரணக்கினை செய்வதும் மறுலோகத்தில் நீடூழிகாலம் நரகத்தின் வேதனைப்படுவதுமே.

லாகுவ இல்லா அன அவனில்லை நானேயல்லாமல் என்று செய்குமார் சொல்லிக்கொடுத்த திக்றை உறுதிகொண்டு அதையே திக்றுகச் செய்து வந்து பின்பு நாயனே எனக்கு இரணத்தைக் கொடுவென்றும் என்னைச் சலாமத்தாக்கிவை என்றும் துவாக் கேட்கிறார்கள் இப்படி அவனில்லை நானேயல்லாமல் என்று சொல்லுகிறவர்கள் துஆக்கேட்க வேண்டியதென்ன நீ அவனென்று வழக்கடித்துவிட்டுத் திரும்ப அவனிடம் எப்படி உதவிகேட்கப் போவாய் பிர்ஊனும் சத்தாதும் நாயன் என்று வழக்காடினார்கள் அல்லாஹுறப்பத்தஆலா அவர்களை ஹலாக்காக்கிவிட்டான் சேகு அவர் முரீதின்களை ஒரு இடத்திலிருந்து கொண்டு பிர்ஊன் சொன்ன சொல்லையே அறபுப்பாஷையாற் சொல்லும்படி கற்பிக்கிறார் இந்தச்சொல்லையே அந்த மூடர்கள் தங்களுக்கு விளங்காத பாஷையிற் சொல்லிக் கொண்டிருப்பதால் இதுதான் ஞானம், இதுதான் பாத்தின் இதுதான் ஈடேற வழியென்று நினைத்து மோசம் போகிறார்கள்.

என் சிநேகிதர்களே இந்தச் செய்குமார்கள் எவ்வளவோ பெயர்களின் ஈமான்களைக் கெடுத்திருப்பதை நாம் நினைக்கும்போது மிகவும் வியசனமடைகிறோம். நாம் அறிந்த சிலநல்லொழுக்கமுடைய மனிதர்களிற்சிலர் இவ்விதமான திக்றுகளையே சொல்லிக்கொண்டு அவர்கள் ஜீவியகாலத்தைக் களித்துப் போடுகிறார்கள் அவர்களுக்குச் சொல்லுகிறோம் நீங்கள் உங்கள் ஆன்மலாபத்துக்காகவேண்டி இதை ஆராய்ந்து பாருங்கள் உங்கள் நிலை சரியோ சரியல்லவோ என்றும் நாம் சொல்வது தப்போ தப்பல்லவோ என்றும் உலமாக்களிடங்கேட்டு அறியுங்கள்.

அப்படி நாம் சொல்வதைப்பற்றி யாதேனுஞ் சந்தேகம் உங்கள் மனதில் உற்பவித்தால் அதை நமக்கு அறிவித்தால் மறுமொழி சொல்லுவோம். உங்கள் சேகுமார்கள் சில குர்ஆன் ஆயத்துகளையும் அத்தாட்சியாகக் காட்டித்தான் உங்களுக்கு இவ்விதமான போதனைகளைக் கற்பித்திருக்கிறார்கள் ஆனால் அந்தக் குர்ஆன் ஆயத்துகளுக்கு இமாம்களும் சுன்னத்து ஜமாத்துகளிலுள்ள ஆரிபீன்களும் வைத்திருக்கின்ற பொருளல்லாத வேறு பொருள்களைக் கொடுத்தே அவர்கள் இப்படி மயக்கத்திலானார்கள். நாம் அவைகளிற் சிலவற்றைப் பின்னால் வெளியாக்குவோம்.

## இமாம்
## அபுல்ஹஸன் சாதுலி
## றஹிமஹுல்லாஃ
## அவர்கள்
## சரித்திரம்.

[சென்ற 12 இலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

குத்புநாயகம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஃ அவர்கள் திருவுளம்பற்றுகிறார்கள் :—

ஆகவே, நான் என்னோடு பேசின பெரியோர்களை வந்து பார்த்த பொழுது. நான் அவர்களைக் காணாததால் என்னுக்குள்ளே நான் வியசனமுற்றவனாகவும் வியப்புற்றவனாகவுமிருந்தேன். அப்படியிருக்கையில், அன்று வெள்ளிக்கிழமையாதலால் பயிரங்க வணக்கஞ் செய்யும் "ஜாமிஉ மஸ்ஜிது" பள்ளிவாசலுக்குப் போய் அங்கே கிழக்குப் பாரிசத்திலிருக்கும் தூண் சமீபத்தில் மக்ஸூறா வென்னுந் தானத்தில் "வணங்குந் தலக்காணிக்கை வணக்கம்" ஆகிய "தஹிய்யதுல் மஸ்ஜிது" என்னும் வணக்கத்தைச் செய்து ஸலாம் கொடுத்துத் திரும்பியபோது என் வலதுபக்கத்தில் ஓர் மனிதனைக் கண்டேன், கண்டு அவர்களுக்கு ஸலாம் சொன்னேன், அவர்கள் விடை பகர்ந்தவர்களாக என் முகத்தைப் பார்த்துக் குறுஞ் சிரிப்பாய்ச் சிரித்துக்கொண்டு, ஓய் அலியே! நீர் இந்தப் பசியாளிகளான கூட்டங்களுக்கு என்னிடம் பணமிருந்தால் நான் கொடுத்துப் பசி தணிப்பேன் என்று நீர் சொல்லுகிறீரோ? கொடையாளனாகிய அல்லாஹுத்தஆலாவைவிட அவனுடைய சிருட்டிகளுக்கு நீர் கொடுப்பீரா? அவன் நாடினால் அப்பசியாளிகளுக்குப் பசியை நீக்கவும், வயிற்றை நிறப்பிக்கவும் கூடிய திராணியுள்ளவன். அவர்களுக்கு வேண்டுமையான விஷயங்கள் யாவையும் அவன் மெத்த அறிந்தவன் என்று சொல்லியதுமாத்திரமல்ல, என் மனதில் நான் நாடியவைகளையெல்லாஞ் சொன்னார்கள். அப்போது நான் அந்த மனிதனை விழித்து அல்லாஃவின்பேரில் சத்தியமாக எனது நாயகரே! நீங்கள் யார்? என்று வினாவியதற்கு அவர்கள் நான் தான் அஹ்மது கிழ்று என்பவன், நான் சீனாதே

சத்தில் இருந்தேன், அப்போது தூ
னிஸ் என்னும் பட்டணத்தி லிருக்கு
ம் என்னுடைய வலியாகிய அலியை
தீவிரமாய்ப்போய்க் கண்டு சந்தித்துக்
கொள்ளுமென்று எனக்கு நாயன் அ
றிவித்தான், ஆகவே, வெகு தீவிர
மாய் உங்களைக் கண்டு சந்திக்கும்படி,
நான் இங்கே வந்தேன் என்றார்கள்.
அப்போது குத்பாவுக் காரம்பமாகி,
ஜும்ஆத் தொழுகையைத் தொழுத
பிறகு பார்த்தேன் நான் அவர்களைக்
காணவில்லை யென்று குத்பு நாயகம்
சாதுலி றஹ்மஹுல்லாஹு கூறினார்
கள்.

இன்னும் வரும்.

## மவ்லிது.

"மவ்லிது" என்பது ஓர் அறபு
வார்த்தை. அதன் பதார்த்தம் பிற
ப்பு என்பதுவாம், இங்கே எங்கள் இ
ரட்சக நாயகம் நபிகள் பெருமானார்
அவர்களது ஜனனம் என்பது கருத்
தாம். எங்கள் இரட்சக நாயகம் றபீ
உல் அவ்வல் மாசம் 12ந் தேதி இப்
பூவுலகின் கண்ணே சர்வ சிருட்டிக
கருணாதயாபர நாயகராய், அகில ரட்
சகராய், பாவவிமோசனராய் சொர்
க்க நகர வழிகாட்டியாய், மங்காத
ஜோதியாய் மாசிலா மணியாய், வேத
நாயகராய் வேதபுறமென்னும் பரிசு
த்த மக்காவில் உற்பத்தியானார்கள்.
அந்த ஜனனச் சிறப்பையே நாம் "ம
வ்லிது" என்று கொண்டாடி வருகி
றோம். இவ்விஷயம் இஸ்லாம் மார்
க்க அனுசாரிகளுக்கு வேண்டுமையா
ன கருமமாயும், புகழப்பட்ட நற்செ
யலாயு மிருக்கின்றது. இதைக்கொ
டுத்துச் சிறப்புச் செய்வதனால் இப்பூ
வுலகின் காரியங்கள் சீர்திருத்தத்தி
லாய் ஒழுங்காகி வருவதோடு அனே
கப் பேறுகளைப்பெற்று வாழ்வதுமன்
றி மறுமையில் நபிகள் பெருமானார்
அவர்களது இரட்சிப்பையும் பெற்
றுக்கொள்வார்கள். எங்கள் மார்க்க
சட்ட நூலிற் கூறியபடி ஒழுங்குட
ன் கொடுத்தாற்றான் அப்படிப்பட்ட
மேன்மையைப் பெற்றுக் கொள்ள
லாம். அங்ஙனமன்றி நமக்குக் கொ
ஞ்சம் பணம் வந்திட்டதனால் முத
லாளி எங்கிறதை அறியட்டு மென்று
முதலாளிமார்களையும், பணமுடைய
வர்களையும் அழைத்துச் சோற்றைக்
கொடுத்து மரியாதை செய்ததனால்
இதன் பலனைப் பெற்றுக்கொள்ளமு
டியாது. இதாகிறது முகஸ்துதி யில்
லாமல் செய்யவேண்டிய வோர் விஷ
யம் பெருமையை நீக்கி சன்மார்க்க
குணமாய் நெறி முறை தவறாது கொ
டுத்து நல் கூலி பெறவேண்டியது.

ஆகையால் எமது இஸ்லாம் மித்தி
ரர்களே! எங்கள் இரட்சக நாயகத்தி
ன் பிறப்புச் சந்தோஷத்தைச் சிறப்
புச்செய்ய நற் கருத்து வையுங்கள்.
உங்களால் கூடிய மட்டில் அழகாயும்
மணமாயுஞ் செய்யுங்கள். அல்லா
ஹுதஆலா உங்களையும் எங்களையு
ம் எங்கள் ரட்சக நாயகம் அவர்களி
ன் மவ்லிது சிறப்பின் பொருட்டால்

இரட்சிப்புக் கொடுத்து நித்தியானந்த சுவன வாழ்வை யருள்புரிவானாக.

## சரீர சௌக்கியம்.

[சென்ற 4 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

வியாதிகள் வந்தால் சரீர சௌக்கியங் குறையும். குறையவே, உலக போகங்களை இஷ்டப்படி யநுபவித்துச் சுகமடைய முடியாது. அப்படியே பரத்துக்கு வேண்டிய சற்சாதனங்களும் கைகூடா. அன்றியும், சரீர சௌக்கியங் குறையக் குறைய ஆயுசும் குறைந்துகொண்டே வரும் என்பது நிச்சயம். ஆதலால், எல்லா விதங்களாலும் வியாதிகளை விலக்க வேண்டியதே நம்முடைய கடமையாய் முடிகின்றது. வியாதியை வரவழைத்துக்கொண்டு, பிற்பாடு அதற்குச் சிகிச்சை தேடுவது விவேகமாகாது. வியாதிகள் அணுகாமல் தடுத்தல்தான் விவேகம். நோய் வந்த பின்பு அதற்குப்படுத்து இடங்கொடாமல் உலாவித்திரிய வேண்டுமென்று அனர்த்தம் செய்து, அற்பவியாதியை பெரிய வியாதியாக்கிப் பலப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இது மகா பிசகான காரியம். நோய்வந்த காலத்தில், காற்று பலமாய் வீசாத விடத்தில், தனக்கு எட்படியிருந்தால் தேகத்துக்குச் சுகமாயிருக்குமோ, அப்படி படுத்தோ, அல்லது உட்கார்ந்தோ, சௌகரியம் போலிருந்தாலே வியாதி பலப்படாமலிருத்தற்குத்தக்க வுபாயமாகும்.

இனி வியாதிகள் வாராமல் தடுக்க வேண்டுமானால், வியாதிகளின் மூலம், அதாவது காரணங்களை யறிந்தாலொழிய, வியாதிகளைத் தடுக்க முடியாது. மிருக பட்சிகளுக்குக் கால பேதங்களால் வரும் அதிசீதோஷ்ணங்களின் கடோரங்களை விலக்கிக் கொள்ளும் கருவிகள் இயற்கையிலேயே அமைக்கப் பட்டிருப்பது மல்லாமல், தேக சௌக்கியத்துக்கான இடங்களையும், காலத்தையும், உணவையுந் தேடிக்கொள்ள ஓர் வித வுணர்ச்சியும் அவைகளுக்கு ஜன்மத்திலேயே யமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினால்தான் மிருக பட்சிகள் பெரும்பாலும் வியாதிகள் அடையாமல் சௌக்கியமாகவே காலங் கழிக்கின்றன. மனிதருக்கோவெனில், மிருதுவான சரீரத்தைக் கொடுத்து, அதில் பகுப்பறிவு ஒன்றும் வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுப்பறிவைக் கொண்டு நாம் சுகந் தேடிக்கொள்ள வேண்டுமென்பது இயற்கைத் தருமத்தின் நோக்கம்.

நம்ம தேசத்து ஜனங்களுக்கு, புசிக்கும் பதார்த்தங்களினாலுங் குடிக்கும் பதார்த்தங்களினாலு மாத்திரந் தான், வியாதிகள் வருமென்னும் ஞானம், சாதாரணமாயிருக்குமேயொழிய, வேறு வழிகளாலும், வியாதிகள் வரக்கூடுமென்னும் ஞானம் அற்பமுங்கிடையாது. தேசத்துக்கு ஒவ்வாத பதார்த்தங்களை யுண்பதினாலும், ஒவ்

வின பதார்த்தங்களையும், அளவுக்கதிகமாயும் அகாலங்களிலும் உண்பதனாலும் வியாதிகள் வரும் என்பதை யாம் இல்லையென்று சொல்லவில்லை. அப்படியே, (புறம்பில்) ஆகாயவெளியிலுள்ள சீதோஷ்ணங்களாலும் மோதி வீசுங் காற்றினாலும், விஷவாயுக்கள் கலந்த ஆகாயத்தை உட்சுவாசிப்பதனாலுங்கூட வியாதிகள் வருமென்பதை நம் இஸ்லாம் மித்திரர்கள் உறுதியாய் நம்பவேண்டும். காற்றானது தேகசௌக்கியத்துக்கென்று ஏற்பட்டுள்ள முக்கிய பூதமாயிருந்தபோதிலும், அதிகப்பட்டால் அதுவுந் துன்பஞ்செய்யுமென்பதே யுண்மை. ஆதலால், வெற்றுடம்போடு (தக்க போர்வை யில்லாமல்) நெடுநேரம் குளிரிலிருப்பதும், நெடுநேரம் உஷ்ணத்திலிருப்பதும், நெடுநேரம் மோதி வீசுங் காற்றிலிருப்பதும், துர்நாற்றமலிந்த விடங்களில் இருப்பதும் ஆகிய இவை மிகுந்த கொடிய வழக்கங்களாம். இவ்வழக்கமானது கருப்பத்திலேயே பதிந்துள்ள வியாதிகளைக் கிளறியெழுப்புவது மல்லாமல், நூதன வியாதிகளையும் உண்டுபண்ணிப் பெருந் தீங்குக்கு இடஞ் செய்யும். இவ்வுண்மையறியாமல் எத்தனையோ பேர், குளிர் முதலிய காலபேதங்களுண்டாகும்போது வியாதிப்பட்டு மடிகிறார்கள்.

தேகத்தை நெடுநேரம் குளிர் அல்லது குளிர்ந்து வீசுங் காற்றுக்கு வெளிப்படுத்துவதனால் (Exposure) வரும் முக்கிய வியாதிகள், சாதாரண ஜலதோஷம், தொண்டைக்குரிய பல வியாதிகள், புட்டாளம்மை (இது அம்மையல்ல-வியாதி), சாதாரண இருமல், உஷ்ண இருமல் (நியுமோனியா), மாருளைப்பு, இரத்த காசம், க்ஷயம், சுவாச காசம் (Asthma) குலைநோய், தலைநோய், சுரம், கண்ணோய், காதுநோய், பேதி, வாந்தி, ஈரல் வியாதிகள், மண்ணீரல் வியாதிகள், இடுப்பு புறங்கழுத்துகளின் பிடிப்பு, கீல்வாதம், இப்படிச் சிறிதும் பெரிதுமான இன்னும் பலவித வியாதிகள் சீதளஸ்பர்சத்தாலுண்டாகின்றன. இவற்றொன்று காணும்போது, நமது ஜனங்கள் சாதாரணமாய்ச் சொல்லும் காரணம் யாது? ஜலதோஷத்தால் மூக்கில் ஜலம் வடிந்து தொண்டை கட்டிக்கொள்ளும்போது, அதற்குமுன், பனியில் அல்லது குளிர்ந்த காற்றில் வெற்றுடம்போடு அல்லது மெல்லிய வஸ்திரம் போர்த்து நெடுநேரம் படுத்திருந்த அல்லது உலாவித்திரிந்த துர்வழக்கத்தைக் காரணமாகச் சொல்லுகிறதில்லை. பனியில் விடியற்காலத்தில் வெற்றுடம்போடு அல்லது மெல்லிய வஸ்திரம் போர்த்து வெளியே சென்றதும், பனிக்கட்டியைப்போற் குளிர்ந்திருக்கும் ஜலத்தில் ஸ்நானம் பண்ணிக்கொண்டு வந்ததுமான துர்வழக்கங்களையுங் காரணமாகச் சொல்லுகிறதில்லை. ஜலதோஷங் காணுவதற்கு முன்னால், சாதாரணமாயுண்ட சீதள பதார்த்தங்களென்று சாதாரணமாயெண்ணப்படும் சுரை, முள்ளங்கி, வெங்காயப் பச்சடி, தயிர், மாதளம்பழம், கிச்சிலிப்பழம், கேழ்வரகுக்கூழ், பழஞ்சோறு ஆகிய இவைபோன்ற பதார்த்தங்களுள் ஒன்றை யுண்டிருந்தால் அதனாலேதான ஜலதோஷம் பண்ணி தொண்டை கட்டிக்கொண்டது என்று "பாவமொருவர்மேலிருக்கப் பழியொருவர்மேற் போகுங்கதை" போலும், நிரபராதியும் உபகாரியுமாயிருப்போர் ஒரோர்கால் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்படும் அபிப்பிராயம்போலும், சாதாரண ஜனங்கள் பெரும்பாலுஞ் சொல்லுகிறது வழக்கம்.

இன்னும் வரும்.